# Tamil Language

## Grade - 8

## தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் -8

<u>பசிப்பிணி மருந்து</u> <u>பாடம் - 8</u>

1) கோவலனுக்கும் நடன மங்கை மாதவிக்கும் மகளாய்ப் பிறந்தவள் மணிமேகலை.

2) மணிமேகலை எனும் காப்பியம் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகும்.

3) இக்காப்பியத்தை எழுதியவர் சீத்தலைச்சாத்தனார் ஆவார்.

4) இது பௌத்த மதக் கருத்துக்களை கூறும் காப்பியமாகும்.

### பாடத்தை மௌனமாக வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்

1) மணிமேகலை காப்பியத்தை எழுதியவர் யார்?

2) “பசி என்னும் தீப்பிணி” எனக் குறிப்பிட்டவர் யார்?

3) தீவதிலக்கை மூலம் எது பற்றி அறியலாம்.

4) தீவதிலக்கையின் வேட்கை யாது?

5) “பசியை தீர்த்தல் அறம்” எனக் கூறியவர் யார்?

6) மணிமேகலைக்கு பிச்சையிட்ட பத்தினிப்பெண் யார்?

7) யானைத்தீ என்னும் கொடிய பசியால் துன்புற்றவள் யார்?

8) அரசனுக்குரிய கடமைகள் எவை?

9) மணிமேகலைக்கு வழங்கப்பட்ட பட்டம் யாது?

10) அமுத சுரபியை மணிமேகலைக்கு வழங்கிய பெண் யார்?

### ஒத்த கருத்துச் சொல் தருக

பிணி -

உயிரினங்கள் -

ஞாலம் -

வேட்கை -

அன்னம் -

திப்பியம் -

பீடிகை -

திரு -

வேழம் -

சென்னி -

## பின்வரும் சொற்களுக்கு பலர்பால் சொல் தருக

உதாரணம்

அரசன் - அரசர்கள்

| | |
|---|---|
| தோழி | - |
| செல்வம் | - |
| நண்பன் | - |
| முனிவர் | - |
| வீரன் | - |

## எதிர்ப்பொருள் சொற்கள்

(மனனம் செய்க)

| | |
|---|---|
| இகழ் | புகழ் |
| ஈதல் | ஏற்றல் |
| ஆக்கம் | கேடு |
| காய்தல் | உவத்தல் |
| சுதேசி | விதேசி |
| தமர் | பிறர் |
| ஆலம் | அமிர்தம் |
| ஐயம் | துணிவு |
| பாலர் | விருத்தர் |
| குணம் | குற்றம் |
| ஈதல் | ஏற்றல் |
| சுரர் | அசுரர் |
| நெறி | அவநெறி |
| கண்டனம் | பாராட்டு |
| கலக்கம் | தெளிவு |
| காலம் | அகாலம் |
| கூம்புதல் | விரிதல் |
| வாட்டம் | மலர்ச்சி |
| துட்டர் | நல்லார் |
| ஆண்டான் | அடிமை |
| இரகசியம் | பரகசியம் |
| நல்லது | கெட்டது |
| இயற்க்கை | செயற்கை |
| நற்குணம் | தீக்குணம் |
| உபகாரம் | அபகாரம் |

## வினைச்சொற்கள்

- முற்றுவினை
  - (01) தெரிநிலை வினைமுற்று
  - (02) ஏவல் வினைமுற்று
  - (03) வியங்கோள் வினைமுற்று
- எச்சவினை
  - பெயர் எச்சம்
    - ஓடிய குதிரை
    - ஓடுகின்ற குதிரை
    - ஓடும் குதிரை
  - வினையெச்சம்
    - படித்து முடித்தான்
    - படிக்கவேண்டும்
    - படித்தால் தருவேன்

### <u>பின்வரும் வாக்கியங்களில் உள்ள எச்சவினைகளை அட்டவணைப்படுத்துக</u>

பக்கம் 67 பாட நூல்

1) பாடிய கிளி பறந்து சென்றது
2) கடவுளை வணங்கித் துதித்தேன்
3) நாங்கள் நாடகம் பழகி நடித்தோம்
4) ஆசிரியர் நாளை படித்து வருதல் வேண்டுமெனக் கூறினார்
5) குடிக்கின்ற பாத்திரத்தை கழுவி வை
6) உயர்ந்த மனிதன் தவறி விழுந்தான்
7) கமலன் வரைந்த படம் அழகானது
8) நீ பழுக்காத பழத்தைப் பிடுங்காதே
9) ஓடிய முயலை புலி துரத்திப் பிடித்தது
10) செய்யாத வேலைக்கு வருந்தாதே

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| | |

### <u>வாக்கியம் அமைக்க</u>

1) எழுதாத
2) விளையாடிய
3) பாட
4) ஓடிய
5) குடித்தால்